

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 87 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 20 – புதன்கிழமை 06 நவம்பர் 2024 – திருச்சி ★★ 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 87 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 20 - Wednesday 06 November 2024 - Trichy ★★ 28 Pages ₹ 5.00


## தேவையில்லாமல் எல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை!

# மக்களுக்கு நன்மை செய்வதே நம் நோக்கம்!

## கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, நவ.6 -

**கொளத்தூர் தொகுதியில் "அனிதா அச்சீவர்ஸ் அகாடமி" சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "புதிய கட்சி தொடங்குபவர்களும் தி.மு.க. அழிய வேண்டுமென்று நினைக்கிறார்கள். தேவையில்லாமல் அவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை, மக்களுக்கு நன்மை செய்வதே நம் நோக்கம்" என்று உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2024) கொளத்தூர், பெரியார் நகர் 4வது தெருவில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

என்னை அறிமுகப்படுத்துகின்ற போது நண்பர் சொன்னார்; பேருரையாற்றப் போகிறேன் என்று சொன்னார். பேருரையாற்ற நான் வரவில்லை. உங்களுக்கு எல்லாம் சுருக்கமாக நன்றியுரையாற்றத் தான் நான் வந்திருக்கிறேன். கொளத்தூர் தொகுதியைப் பொறுத்தவரைக்கும் நன்றி என்று சொன்னால்கூட உங்களுக்கெல்லாம் கோபம் வந்துவிடும். நன்றியுரை மட்டுமல்ல, வரவேற்புரை ஆற்றுவதற்கும் எனக்கு தகுதி உண்டு. அந்த வகையில் நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

### கொளத்தூர் வந்தாலே எனக்கு மகிழ்ச்சி!

எவ்வளவு நெருக்கடியான வேலைகள் இருந்தாலும், பல்வேறு அரசு வேலையாக இருந்தாலும், கட்சி வேலைகளாக இருந்தாலும் அதற்கிடையில் கொளத்தூருக்கு வந்தால் எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். அதிலும் கொளத்தூருக்கு மட்டுமல்ல, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் நிகழ்ச்சி என்று சொன்னால், அதைவிட அதிகமான உற்சாகம் எனக்கு வந்துவிடுகிறது. அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் படிக்கும் மாணவ, மாணவியர்களைப் பார்க்கும்போது எனக்கு தானாக உத்வேகம் வந்துவிடும். அந்த உத்வேகத்தைப் பெறுவதற்காகத்தான் நான் அடிக்கடி இங்கு வருவதுண்டு.

கடந்த 2017ஆம் ஆண்டு தங்கை அனிதா அவர்கள் இறந்த போது, இறந்தபோது என்று சொல்லக்கூடாது. தற்கொலை செய்து கொண்டபோது, நாம் எல்லோரும் தாங்க முடியாத சோகத்திற்கும் பெரிய வேதனைக்கும் ஆளாகினோம். அதற்கு என்ன காரணம் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும் என்று நான் நம்புகிறேன்.

நீட் தேர்வு அவரின் கனவை சிதைத்து - அவரின் உயிரை பறித்தது. ஒடுக்கப்பட்ட மக்களின் மருத்துவக் கல்விக் கனவை சிதைக்கும் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப்போராட்டம் இன்று வரையிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த குரலுக்கு நிச்சயம் ஒருநாள் ஒன்றிய அரசு பணியத்தான் போகிறது. அது நடந்துதான் தீரும். அதில் எந்த மாற்றமும் இல்லை. இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு, நாளைக்கு இல்லாவிட்டால் நாளை மறுநாள். அது நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் நிறைய இருக்கிறது.

இறந்த, மறைந்த, தற்கொலை செய்துகொண்டு நம்மையெல்லாம் மீளாத்துயரத்திற்கு ஆளவிட்டுச் சென்ற தங்கை அனிதாவின் நினைவாக, முன்னேற துடிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையில், அதற்கு முதல் வாய்ப்பை ஏற்படுத்தி தரக்கூடிய பயிற்சி மையமாக 2019ஆம் ஆண்டு நம்முடைய கொளத்தூர் தொகுதியில், இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமியை நாம் தொடங்கினோம்.

### பயிற்சியோடு கூடிய - இலவச வேலைவாய்ப்பு மையம்!

இந்த அகாடமி பயிற்சியோடு கூடிய இலவச வேலை வாய்ப்பு மையமாக செயல்பட தொடங்கியது. இங்கே இதுவரைக்கும் பன்னிரெண்டு பேட்சுகளில் 974 பெண்களும் - எட்டு பேட்சுகளில் 538 ஆண்கள் என்று இதுவரைக்கும் 1,512 பேர் Tally பயிற்சி முடித்து இலவச மடிக்கணினி பெற்றிருக்கிறார்கள். எட்டு பேட்சுகளில் 2,536 மகளிர் தையல் பயிற்சி முடித்துவிட்டு, மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் பெற்றிருக்கிறார்கள்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.11.2024) கொளத்தூர், ஜெகநாதன் தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இணைந்து 2.85 கோடி ரூபாய் செலவில் பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "Co-working Space" மற்றும் மாணவர்களுக்கான "கல்வி மையம்" என அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய "முதல்வர் படைப்பகத்தை" திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர். கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

நவ.25-ல்

## நாடாளுமன்றம் கூடுகிறது!

*புதுடெல்லி, நவ. 6 - நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் இந்த மாதம் இறுதியில் நவம்பர் 25 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 20ஆம் தேதி வரை நடைபெற வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில், மக்களவை மற்றும் மாநிலங்களவையின் சிறப்பு கூட்டுக் கூட்டத்தொடர் நவம்பர் 26 ஆம் தேதி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*



*இந்த சிறப்பு அமர்வு, இந்திய நாடாளுமன்றத்தின் பழைய பார்லிமெண்ட் மாளிகையின் மைய மண்டபத்தில் நடைபெறும்.*

*அரசியலமைப்பு நவம்பர் 26, 1949 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நாள் அரசியலமைப்பு தினமாக கொண்டாடப்படுகிறது. மேலும் இந்திய அரசியலமைப்பு ஜனவரி 26,1950 முதல் முழுமையாக நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.*

---

இந்திய

## பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி!

மும்பை, நவ. 6 –

இந்திய பங்கு சந்தைகள் கடும் வீழ்ச்சியுடன் வர்த்தகமாகி விருகின்றன. இதனால், முதலீட்டாளர்களுக்கு சுமார் 8 லட்சம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

நான்கு நாள் விடுமுறைக்குப் பின் இந்திய பங்குச்சந்தைகள் நேற்று முன்தினம் காலை கடும் சரிவுடன் தொடங்கின. மும்பைப் பங்குச் சந்தை குறியீடான சென்செக்ஸ் சுமார் ஆயிரத்து 400புள்ளிகள் சரிந்து, 78 ஆயிரத்து 394 புள்ளிகளுடன் வர்த்தகமானது. தேசியப் பங்குச் சந்தை குறியீடான நிஃப்டி 433 புள்ளிகளுக்கும் மேல் சரிந்து 23 ஆயிரத்து 872 புள்ளிகளில் வர்த்தகமானது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கு விலையில் ஏற்பட்ட சரிவுகளே இந்த வீழ்ச்சிக்கு காரணமாக கூறப்படுகிறது.

---

## ரூ.114 கோடியில் 3250 பேருக்கு வேலைவாய்ப்பு!

# கோவையில் 2-ஆவது தொழில்நுட்பப் பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

கோவை, நவ. 6 -

**கோவை மாநகரில் இரண்டாவது தொழில் நுட்பப் பூங்கா ரூபாய் 114 கோடியில் 3250 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்து உரையாற்றினார்.**

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்து கோவையில்தான் அதிகளவிலான ஐ.டி. நிறுவனங்கள் இருக்கின்றன. சமீபத்திய கணக்கெடுப்புபடி, கோவையில் 744 ஐடி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஐடி துறையில் 20 சதவீதம் வளர்ச்சி அடைந்து வருகிறது. கோவை சரவணம்பட்டியில் தனியார் ஐ.டி. பார்க் இயங்கி வருகிறது. இங்குள்ள ஐ.டி. நிறுவனங்களில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகிறார்கள். பீளமேடு அரசு மருத்துவக்கல்லூரி அருகே தமிழ்நாடு அரசின் ஐ.டி. பார்க் இயங்கி வருகிறது. இங்கு, 25க்கும் மேற்பட்ட ஐ.டி. நிறுவனங்கள் தங்களது கிளைகளை அமைத்துள்ளன. இதன்மூலம், 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் மூலம் ஐ.டி. துறையில் கோவை மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு சார்பில் கோவையில் மேலும் ஒரு ஐ.டி. பார்க் தயாராகியுள்ளது. அதாவது, கோவையின் அடையாளமாக ஐ.டி. துறையை மாற்றவும், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (எல்காட்) மூலம், தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றவும் தமிழ்நாடு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த இரண்டாவது ஐ.டி. பார்க் தயாராகி உள்ளது. கோவை விளாங்குறிச்சியில் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் ரூ.7114.16 கோடி மதிப்பில் இப்புதிய தகவல் தொழில்நுட்ப பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இது, 3.94 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்காக, பொதுப்பணித்துறை மூலம் இந்த ஐ.டி. பார்க் கட்டப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் 2 அடித்தளம், தரைத்தளம் மற்றும் ஐந்து மேல்தளம் என மொத்தம் 8 தளங்களுடன் 27,379 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதன் 2வது அடித்தளத்தில் 37,369 சதுர அடியில் 77 கார் மற்றும் 60 இரு சக்கர வாகனங்களை நிறுத்த முடியும். முதல் அடித்தளத்தில் 37,369 சதுர அடியில் 76 கார் மற்றும் 60 இரு சக்கர வாகனங்களை நிறுத்த முடியும். தரைத்தளத்தில் உணவு அருந்துமிடம் மற்றும் பொது நிர்வாக அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளம், இரண்டாம்தளம், மூன்றாம்தளம், நான்காம்தளம் மற்றும் 5வது தளங்களில் தகவல் தொழில் நுட்ப அலுவலகத்திற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு, அனைத்து பணிகளும் நிறைவுபெற்றுள்ளன.

இதுதவிர, இக்கட்டடத்தில் பொது பயன்பாட்டிற்கு என 6 மின்தூக்கிகள், 2 சேவை மின்தூக்கிகள், தீயணைப்பு வசதிகள், தொலை தொடர்பு வசதிகள், கட்டிட மேலாண்மை அலுவலக வசதிகள், இடிதாங்கி வசதிகள், மழைநீர் சேகரிப்பு வசதிகள், தானியங்கி பண பரிவர்த்தனை வசதி, ஜெனரேட்டர் அறை, பாதுகாப்பாளர் அறை, 6 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த் தொட்டி, 1.35 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, 130 கே.எல்.டி. கொள்ளளவு கழிவுநீர் சுத்திகரிப்பு தொட்டி, கழிவறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறத்தில், 158 கார் மற்றும் 151 இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிடத்தின் பிரதான பணிகள் மற்றும் சிறு சிறு பணிகள் என அனைத்தும் நிறைவுபெற்றுள்ளன. இப்புதிய தொழில்நுட்ப கட்டிடத்தில் சுமார் 15 ஆயிரம் சதுர அடி ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தவிர குறு, சிறு நிறுவனங்கள், புதிய தொழில் முனைவோருக்கும் வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

இதன்மூலம் குறைந்தபட்சம் 3,250க்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உள்ளது. இதன்மூலம் பெங்களூருக்கு இணையாக தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் 'ஹப்'ஆக கோவை மாறி வருவதாக தொழில்துறையினர் தெரிவிக்கின்றனர். இப்புதிய ஐடி பார்க் திறப்பு விழா நேற்று (5ம்தேதி, செவ்வாய்) காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

---

முதல்வர் அறிவித்த 1000 முதல்வர் மருந்தகங்கள்!

## "முதல்வர் மருந்தகம்" அமைக்க இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.6 –

"முதல்வர் மருந்தகம் அமைக்க இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.08.2024 அன்று சுதந்திர தினவிழா உரையில், "பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும் பிற மருந்துகளையும் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யும் வகையில் முதற்கட்டமாக 1000 முதல்வர் மருந்தகங்கள் துவங்கப்படும்" என்று அறிவித்தார்.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பாக 29.10.2024 அன்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதல்வர் மருந்தகங்கள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள், மாவட்ட மருந்து சேமிப்புக் கிடங்குகள் அமைத்தல் உள்ளிட்ட ஏற்பாடுகள் குறித்து கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகம் ஆகியோருக்கு உரிய அறிவுரைகள் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முதல்வர் மருந்தகத்திற்கு தேவையான பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும். மருத்துவம் சார்ந்த இதர மருத்துவ உபகரணங்கள், சித்தா, ஆயுர்வேதம், இம்காப்ஸ், டாம்கால் மற்றும் யுனானி மருந்துகள், சர்ஜிக்கல்ஸ் மற்றும் நியூட்ராசூட்டிக்கல்ஸ் உள்ளிட்ட மருந்து வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் மருந்தகம் அமைக்க விருப்பமுள்ள BPharm / D.Pharm சான்று பெற்றவர்கள் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் மருந்தகம் அமைக்க விருப்பம் உள்ளவர்கள் கூட்டுறவுத் துறை மூலம் www.mudhalvarmarunthagam.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் செய்யும் வழிமுறைகள், தேவையான ஆவணங்கள் மற்றும் திட்ட விவரங்கள் மேற்படி இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மூலம் முதல்வர் மருந்தகங்கள் உருவாக்கப்பட்டு, வரும் 2025 ஜனவரி மாதம் முதல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.